DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 14.08.2025.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.14/2024 |
| Deposition of Witness for Prosecution | : | PW.3 |
| Name | : | ராணி |
| Husband Name | : | சூசைராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E. Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 14.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டம், மஞ்சக்குட்டையில் குடியிருந்து தனியார் பள்ளியில் ஆசிரியையாக வேலை செய்து வருகிறேன். எனது பெயர் ராணி ஆனால் எனக்கு ஞானஸ்தானம் செய்யும் மார்கிரேட் ராணி என்று பெயர் வைத்தனர். எனது அலுவல் பெயர் ராணி ஆகும். ஆஜர் எதிரி எனது கணவர். கடந்த 22.03.2024–ம் தேதியன்று நானும் எனது கணவர் சூசைராஜ் என்பவரும் இருசக்கர வாகனத்தில் மஞ்சக்குட்டையிலிருந்து பிலியூர் செல்லும் சாலையிலுள்ள சர்ஜ்க்கு சென்றோம். இருசக்கர வாகனத்தை எனது கணவர் ஓட்டினார். புனித ஆரோக்கிய அன்னை ஆலையம் சர்ஜ் கேட் அருகே சென்றபோது இரண்டு நபர்கள் வேகமாக இருசக்கர வாகனத்தில் எங்களுக்கு பின்னால் வந்து நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது

மோதி நானும் எனது கணவரும் கீழே விழுந்துவிட்டோம். எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. என் கணவருக்கு காலில் காயம் ஏற்பட்டது.

எனக்கு தலையில் அடிப்பட்டதால் மயக்கம் ஏற்பட்டது. இருசக்கர வாகனத்தில் எங்களோடு பயணம் செய்த எனது மகள்கள் இருவருக்கும் லேசான காயம் ஏற்பட்டது. சம்பவம் நடந்தபோது எனது பெரிய மகளுக்கு 10 வயது, சிறிய மகளுக்கு 7 வயது இருக்கும். அதன்பின்பு ஏற்காடு அரசு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றோம்.

அதன் பின்பு என்னையும், எனது கணவரையும் சேலம் குறிஞ்சி மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சைக்கு பெற்றோம். அதன் பின்பு அங்கு எனது தலையில் 6 தையல் போட்டார்கள். எனது கணவருக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது சிகிச்சை அளித்தார்கள். அதன் பின்பு எங்கள் இருசக்கர வாகனத்தின் மீது மோதிய நபர் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். எங்கள் இருசக்கர வாகனத்தின் பதிவெண் TN 54 Q 4887, விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் பதிவெண் தெரியாது.

**(அரசுத் தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டுஅனுமதி வழங்கப்பட்டது)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

கடநத் 22.03.2024-ம் தேதி இரவு சுமார் 21.00 மணியளவில் ஏற்காடு - வெள்ளக்கடை செல்லும் சாலையில் மஞ்சக்குட்டை கிரேக் மோர் சர்ஜ் கேட் அருகே ஆஜர் எதிரி TN 54 Q 4887 என்ற பதிவெண் கொண்ட HONDA SHINE இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று இண்டிகேட்டர் போடாமலும் எவ்வித சைகையும் செய்யாமலும் சென்று திடிரென வலது பக்கம் திரும்பியதில் அவருக்கு பின்னால் TN 54 M 2138 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை தட்சனமூர்த்தி என்பவர் ஓட்ட அவரது சகோதரர் பின்னார் அமர்ந்துகொண்டு வந்த இருசக்கர வாகனத்தின் மீது ஆஜர் எதிரி ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றும், மேற்படி விபத்தை ஆஜர் எதிரி ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் நான்

பின்னால் அமர்ந்து நேரில் பார்த்துவிட்டு தற்போது ஆஜர் எதிரி எனது கணவர் என்பதால் அவரை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக விபத்து நடந்த விவரத்தை மாற்றி கூறி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

ஆஜர் எதிரி பைக்கிற்கு பின்னால் வந்த பைக் நீங்கள் சென்ற பைக்கின் மீது மோதியாதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-.R. Elanchezhian,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.